

பசும்பொன் தேவர் திருமகனார் அவர்களின் குருபூஜை நாளான நேற்று முன்தினம், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், இராமநாதபுரம் மாவட்டம் – பசும்பொன்னில் உள்ள தேவர் திருமகனார் நினைவிடத்தில் மலர்தூவி மரியாதை செலுத்தினார். முன்னாள் அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் எம்.எல்.ஏ., தங்கம் தென்னரசு எம்.எல்.ஏ., கே.ஆர்.பெரியகருப்பன், இராஜ. கண்ணப்பன் எம்.எல்.ஏ., பி.மூர்த்தி, டி.ஆர்.பி.ராஜா, மாவட்டச் செயலாளர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ., புதுக்கோட்டை வை.முத்துராஜா எம்.எல்.ஏ. உள்ளிட்டோர் உடன் உள்ளார்கள்.



சுதந்திரப் போராட்ட வீரர்கள் – மாமன்னர்கள் மருதுபாண்டிய சகோதரர்களின் 225வது குருபூஜையை முன்னிட்டு மதுரை தெப்பக்குளத்தில் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களால் நிறுவப்பட்ட அவர்களது திருவுருவச் சிலைகளுக்கு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார், உடன் முன்னாள் அமைச்சர்கள் பொன் முத்துராமலிங்கம், தங்கம் தென்னரசு, பி.மூர்த்தி, டி.ஆர்.பி.ராஜா, சட்டமன்ற உறுப்பினர்கள் சேடபட்டி மு.மணிமாறன், ஐ.பி.செந்தில்குமார், காதர் பாட்சா என்ற முத்துராமலிங்கம், கழக நிர்வாகிகள் வ.வேலுசாமி, பெ.குழந்தைவேலு, மா.ஒச்சுபாலு, மா.ஜெயராம், அக்ரி கணேசன், இன்பா ரகு, முத்துராமலிங்கம், ஏ.கே.ஆறுமுகம் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.



கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம – மதுரை – கோரிப்பாளையத்தில் உள்ள பசும்பொன் தேவர் திருமகனாரின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து வணங்கினார். முன்னாள் அமைச்சர் பொன் முத்துராமலிங்கம் உள்ளிட்ட கழக முன்னணியினர் உடன் உள்ளார்கள்.

"பத்தரை மாற்றுத் தங்கம்! பசும்பொன் சிங்கம்!" என்று மக்களால் போற்றப்பட்ட

பசும்பொன் திருமகனாரின் புகழ் வாழ்க!

குருபூஜை நாளில் – கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வலைதளப்பதிவு

சென்னை, நவ.1-

கழகத் தலைவர் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:

வரலாறாய் வாழ்ந்து, வீரத்துக்கும் தியாகத்துக்கும் எடுத்துக்காட்டாக நிலைத்து நிற்கும் பசும்பொன் திரு மகனாரைப் போற்றுகிறேன்!

விடுதலைப் போரில் நேதாஜியுடன் இணைந்து செயலாற்றிய தீரர்!

குற்றப் பரம்பரைச் சட்டத்தை எதிர்த்து, பிற்படுத்தப்பட்ட சமூகங்களின் உரிமைகளுக்காகப் போராடிய போராளி!

உழவர்களின் நலனுக்காகவும் தொழிலாளர்க ளின் உரிமைகளுக்காகவும் சங்கங்களை நிறுவிய வர்; போராடிச் சிறை சென்ற தியாகி!

சட்டமன்றத்திலும் நாடாளுமன்றத்திலும் மக்க ளுக்காகக் குரல் கொடுத்த மாண்பாளர்!

"பத்தரை மாற்றுத் தங்கம்! பசும்பொன் சிங்கம்!" என்று மக்களால் போற்றப்பட்ட பசும்பொன் திருமக னாரின் புகழ் வாழ்க!



இவ்வாறு அப்பதிவில் கழகத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்நாட்டில் இன்று சட்டம் – ஒழுங்கு சந்தி சிரிக்கிறது! மக்கள் பல்வேறு துன்பங்களுக்கும் தொல்லைகளுக்கும் ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள்!

'இந்த ஆட்சி எப்போது ஒழியும்?' என - வாக்களித்தவர்கள் ஏங்கும் நிலை இன்று!

பசும்பொன்னில் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் பேட்டி!

சென்னை, நவ.1-

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம், பசும்பொன்னில் - பசும் பொன் தேவர் திருமகனார் அவர்களின் நினை விடத்தில் மலர்தூவி மரியாதை செலுத்தியபின், அங்கு திரண்டிருந்த ஊடகத்தினருக்கு பேட்டி யளிக்கையில், "தமிழ்நாட்டில் இன்று சட்டம் - ஒழுங்கு சந்தி சிரிக்கிறது! மக்கள் பல்வேறு துன்பங்களுக்கும், தொல்லைகளுக்கும் ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள்! என்று" குறிப் பிட்டார்.

மேலும் கழகத் தலைவர் அவர்கள் தமது பேட்டியில், "இந்த ஆட்சி எப்போது ஒழியும்? என, வாக்களித்தவர்கள் எல்லாம் ஏங்கும் நிலைதான் இன்று உள்ளது" என்று குறிப்பிட்டார்.

கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர் கள், நேற்று முனதினம் (30.10.2026) பசும் பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் குரு பூஜையையொட்டி, மதுரை கோரிப் பாளையத்தில் உள்ள அவரது சிலைக்கும், பசும்பொன்னில் உள்ள நினைவிடத்திலும் மரியாதை செலுத்தினார்.

அதனைத் தொடர்ந்து கழகத் தலைவர் அவர்கள் ஊடகத்தினருக்குப் பேட்டியளித்தார்.

அப்போது அவர் குறிப்பிட்டதாவது:-

"நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அவர்கள் நடத்திய விடுதலைப் போராட்டத்திற்குத் துணை நின்றவர்தான் நம்முடைய பசும் பொன் முத்துராமலிங்கத் தேவர் ஐயா அவர்கள்.

ஆங்கிலேய அரசின் பிற்படுத்தப்பட்ட மக்க ளுக்கு எதிரான சட்டத்தை எதிர்த்துப் போரா டிய ஒரு போராளிதான் நம்முடைய தேவர் திருமகனார் அவர்கள்.

சட்டமன்ற உறுப்பினராகவும், நாடாளு மன்ற உறுப்பினராகவும் இருந்து செயல் பட்டவர் நம்முடைய தேவர் திருமகனார் அவர்கள்.

தேவரின் பெருமையைப் போற்றும் - கழக அரசின் திட்டங்கள்!

அத்தகைய பெருமகனாருடைய நினை விடத்தில் இன்று நாங்கள் எல்லாம் எங்களு டைய வணக்கத்தையும் மரியாதையையும் செலுத்துகிற வாய்ப்பைப் பெற்றமைக்கு நாங் கள் பெருமைப்படுகிறோம்.



திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத் தில், "பசும் பொன்னில் பொதுமக்கள் வசதிக் காக இரண்டு மண்டபங்கள் அமைக்கப்படும்" என்று சொல்லி, அந்த அடிப்படையில், 2024 ஆம் ஆண்டு பசும்பொன் முத்துராமலிங்கத் தேவரின் அரங்கத்தை நான்தான் அன்றைக் குத் திறந்து வைத்தேன்.

தேசத்துக்காகப் போராடிய பசும்பொன் ஐயாவினுடைய பெருமையைப் போற்றவும், கழக ஆட்சிக் காலத்தில் பல்வேறு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன.

தேவரின் நூற்றாண்டு விழாவை சிறப்பாகக் கொண்டாடியவர் கலைஞர்!

குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்றால், 2007ஆம் ஆண்டு அவருடைய நூற்றாண்டு விழாவை நம்முடைய தமிழ்நாட்டின் முதல மைச்சராக இருந்த தலைவர் கலைஞர் அவர் கள்தான் அன்றைக்குச் சிறப்பாகக் கொண்டா டினார் என்பது மிகச் சிறப்பு.

அதேபோல, கோரிப்பாளையத்தில் பெரு மதிப்பிற்குரிய மூக்கையா தேவர் அவர்களின் சீரிய முயற்சியோடு, தேவர் திருமகனாருக்குச் சிலை அமைக்கப்பட வேண்டும் என்ற அந்தக் கனவைத் தலைவர் கலைஞர் அவர் கள்தான் நிறைவேற்றித் தந்தார்கள். அன்றைக்கு இந்திய நாட்டின் குடியரசுத் தலைவராக இருந்த வி.வி. கிரி அவர்கள்தான் அவருடைய சிலையைத் திறந்து வைத்துப் பெருமை சேர்த்தார்கள்.

தேவரின் திருவாசகத்தை நாங்கள் பின்பற்றுவோம்!

அதேபோல மதுரை ஆண்டாள்புரம் பாலத் திற்கும் தேவர் திருமகனாரின் பெயரைத்தான் சூட்டி, தலைவர் கலைஞர் அவர்கள் போற்றிப் புகழ்ந்திருக்கிறார்கள்.

எனவே, இப்படி பல்வேறு திட்டங்கள், பல் வேறு நலப் பணிகள் எல்லாம் கழக ஆட்சிக் காலத்தில் நடை பெற்றிருக்கின்றன.

தொடர்ந்து என்னுடைய தலைமையில் நடைபெற்ற 'திராவிட மாடல்' ஆட்சியின் மூல மாகப் பல்வேறு பணிகளை நாங்கள் நிறை வேற்றித் தந்திருக்கிறோம்.

"கோழையாக இருக்கக் கூடாது; போராடி வெற்றி பெற வேண்டும்" என்று அவர் சொன்ன திருவாசகம்தான் என்னுடைய மன திலே இன்றைக்கும் நிலைத்து நிற்கிறது. அந்த வழி நாங்கள் நிச்சயமாகப் பின்பற்றுவோம் என்ற உறுதியை இந்த நேரத்தில் உங்கள் மூலமாக நாங்கள் எடுத்துக்கொள்கிறோம்.

இவ்வாறு கழகத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்.

அதனைத் தொடர்ந்து அவர் செய்தியாளர் களுக்கு அளித்த பேட்டி வருமாறு:

கேள்வி: தமிழ்நாட்டின் இன்றைய நிலை எப்படி இருக்கிறது என்று நினைக்கிறீர்கள்?

பதில்: உங்களுக்குத் தெரியாமல் எதுவும் இல்லை; உங்களுக்கே எல்லாம் தெரிந்திருக் கும். இருந்தாலும் கேட்கிறீர்கள். இந்த ஆட்சி வர வேண்டும் என்று விரும்பி வாக்களித்த வர்கள் எல்லாம், இன்றைக்கு "இந்த ஆட்சி எப்போது ஒழியும்?" என்ற நிலையில் போய்க் கொண்டிருக்கிறது. நீங்களே சமூக வலைத ளங்களில் எல்லாம் தொடர்ந்து பார்த்திருப்பீர் கள்; அந்தச் சமூக வலை தளங்களில் எல்லாம் மக்கள் என்னென்ன பேட்டிகள் கொடுக்கிறார் கள்? என்பதையும் பார்த்திருபீர்கள். விலை வாசி எந்த அளவுக்கு விஷம் போல உயர்ந்து போய்க்கொண்டிருக்கிறது! சட்டம்ஒழுங்கு சந்தி சிரித்துக் கொண்டிருக்கிறது. அதே போன்று, பாலியல் பலாத்காரம்.

சினிமாவை உண்மை என நம்பி ஏமாந்த மக்கள்!

இன்னும் சொல்ல வேண்டுமென்றால், சிறைச்சாலையில் இருந்த கைதிகள் எல்லாம் கூட தப்பித்து ஓடக்கூடிய நிலை இன்றைக்கு உருவாக்கப்பட்டுள்ளது.

எனவே, சட்டம், ஒழுங்கும் இன்றைக்குச் சந்தி சிரிக்கிறது. மக்களும் பல துன்பங்க ளுக்கும் தொல்லைகளுக்கும் ஆளாக்கப்பட்டிருக் கிறார்கள்.

சிறுமிகள் இன்றைக்குப் பாலியல் கொடு மைக்கு ஆளாக்கப் படுவது மட்டுமல்லாமல், திடீர் திடீரென்று காணாமல் போகக்கூடிய செய்திகளும் தொடர்ந்து வந்து கொண்டிருக் கின்றன.

சினிமாவில் அவர் கதாநாயகனாக நடித் ததை நம்பி, அவர் கதாநாயகனாகச் செயல்ப டுவார் என்று நம்பி வாக்களித்த மக்கள் எல் லாம் இன்றைக்கு ஏமாற்றத்தில் இருக்கி றார்கள். இதுதான் உண்மை.

கேள்வி: உங்கள் ஆட்சியில் அடிப்படை வச திகள் எல்லாம் நன்றாக இருந்தது... இப்போது அதில் எல்லாம் பிரச்சினை வந்துவிட்டதே?

பதில்: அதான் சொன்னேனே, நாங்கள் சொன்னதையெல்லாம் செய்துவிட்டோம்; நாங்கள் செய்ததை யெல்லாம் சொன்னோம். அவர் வந்த பிறகு எதுவும் நடக்கவில்லை. அதைப்பற்றி எல்லாம் இந்த முதலமைச்சர் கவலைப்பட வில்லை. அவர் ஏதோ 'கோட் சூட்' போட்டுக்கொண்டு, ஏதோ அலுவலகத் திற்கு வேலைக்குப்போவது போல காலை யில் 9, 10 மணிக்கு வந்துவிட்டு, மாலை 5 மணிக்கெல்லாம் வீட்டிற்குப் போய்விடுகிறார். இதுதான் நிலவரம்.

கேள்வி: இடைத் தேர்தலில் சீமான் போட் டியிடுகிறார். அவருக்கு உங்கள் ஆதரவு உண்டா?

பதில்: தேர்தல் தேதி அறிவிக்கப்படட்டும்.

கேள்வி: முன்னாள் முதலமைச்சராக த.வெ.க.வின் 5 மாத கால ஆட்சிக்கு உங்கள் மதிப்பெண் என்ன?

பதில்: 'O'

கேள்வி: உங்களுக்கே வரும்போது பாது காப்பில்லையே!

பதில்: நான் அதைப் பற்றியெல்லாம் கவலைப்படுவதில்லை. எங்களுக்கு கழகம் இருக்கிறது; கட்சித் தோழர்கள் இருக்கிறார் கள். தொண்டர்கள் இருக்கிறார்கள் அந்தப் பாதுகாப்பு போதும் எனக்கு!

கேள்வி: அ.தி.மு.க., தி.மு.க. இரண்டு பேரும் கூட்டணியில் இருப்பதாகத் தமிழ்நாடு அமைச்சர்கள் தொடர்ந்து சொல்கிறார்களே?

பதில்: அப்படியா?

'மிசா'வையே சந்தித்த எங்களுக்கு- இதெல்லாம் ஒன்றும் பெரிதல்ல!

கேள்வி: தி.மு.க. நபர்கள் மீதான கைது நடவடிக்கைகளைத் தி.மு.க. எப்படி எதிர் கொள்ளப் போகிறது?

பதில்: சட்டரீதியாக நாங்கள் எதிர்கொண்டி ருக்கிறோம். நீதிமன்றத்திற்குச் சென்று நாங் கள் குற்றவாளிகள் இல்லை என்று நிரூபிப் போம். அந்த அடிப்படையில்தான் எங்க ளுடைய பணி நடந்து கொண்டிருக்கிறது. அதைப்பற்றி நாங்கள் கவலைப்படவில்லை.

நாங்கள் அவசரநிலையை எதிர்த்தவர்கள்; 'மிசா' சட்டத்தைப் பார்த்தவர்கள், 'தடா' சட்டத்தைப் பார்த்தவர்கள், 'பொடா' சட்டத் தைப் பார்த்தவர்கள். இதெல்லாம் எங்களுக்கு ஒன்றும் பெரிய விஷயமே இல்லை. சந்திக்க வேண்டிய நேரத்தில், சந்திப்போம்.

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பேட்டியளித்தார்.